2002 அக்டோபர் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 40, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

40 –

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***12090–திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மடத்தூர் பஞ்சாயத்து ஒன்றியம், சங்கரலிங்கபுரம் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், மடத்தூர் ஊராட்சிக்குட்பட்ட சொக்கநாதன்பட்டி, கட்டளையூர், சங்கரலிங்கபுரம் மற்றும் முத்தம்மாள்புரம் ஆகிய நான்கு குடியிருப்புகளுக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆணைப்படி, சொக்கநாதன் பட்டியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, இத்திட்டத்தின் மூலம் வரும் 2003 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவி தொகுதி மக்களுக்கு இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சேரன்மகாதேவி ஒன்றியத்தில் பனகுடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கும், பாப்பாக்குடி ஒன்றியத்தில் பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கும், கடையம் ஒன்றியத்தில் ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கும் அனுமதியளித்து நிறைவேற்றுவதற்கு முதற்கண் என்னுடைய நன்றியைத்

[2002 அக்டோபர் 28

தெரிவித்துக்கொள்கிறேன். ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும், அதனால் பயன்பெறும் கிராமங்கள் எத்தனை என்பதையும் அறிய விரும்புகிறேன். வருகின்ற 2003 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்குள் இத்திட்டம் முடிவுறும் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே, அதனால் பயன்பெறும் கிராமங்களின் விவரங்களைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டம் பற்றி தனியாகக் கேள்வி கேட்டால் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 41, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

41—

விடுதிக் கட்டடம்

***15400—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், உவரி கிராமத்தில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுத்திட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், உவரியில் இயங்கும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதிக்கு ரூ. 31.50 இலட்சம் செலவில் அனைத்து அடிப்படை வசதிகளுடன்கூடிய கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மாணவர் விடுதி, மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்